

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 327 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 23 – திங்கள்கிழமை 07 ஜூலை 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 327 : Thiruvalluvar Year - 2056 - Aani 23 - Monday 07 July 2025 - Madurai 16 Pages ₹ 5.00


## ‘ஓரணியில் தமிழ்நாடு’ தொடர்பாக தொகுதி நிலவரங்கள் குறித்து

# கழகத் தலைவர், கழக நிர்வாகிகளுடன் தொலைபேசியில் உரையாடல்!

## தென்காசி தெற்கு மாவட்ட தோழர்களுடன் நேற்று கலந்துரையாடினார்!

**சென்னை, ஜூலை 7-**

**‘ஓரணியில் தமிழ்நாடு’ தொடர்பாக தொகுதி நிலவரங்கள் குறித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக நிர்வாகிகளுடன் தொலைபேசியில் உரையாடி தொகுதி நிலவரம் குறித்து கேட்டு வருகிறார். நேற்று தென்காசி தெற்கு மாவட்ட கழகத் தோழர்களுடன் கலந்துரையாடினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் “ஓரணியில் தமிழ் நாடு” எனும் பிரச்சார இயக்கத்தை ஜூலை முதல் நாளன்று தொடங்கிவைத்தார்கள். மக்களின் பேராதரவுடன் “ஓரணியில் தமிழ்நாடு இயக்கம்” மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

(3.7.2025) அன்று காலை சென்னை ஆழ்வார்ப்பேட்டை பகுதியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் குறித்து எடுத்துரைத்தார். இதுகுறித்து முதலமைச்சர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

“தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க, சாதி மதம் அரசியல் கடந்து ஓரணியில் தமிழ்நாடு வெல்லட்டும்!

### அனைவரையும் ஒன்றிணைக்க

### 45 நாட்கள் மாநிலம் முழுதும் நிர்வாகிகள் பரப்புரை!

இதற்காக அடுத்த 45 நாட்கள், கழக மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மூத்த முன்னோடிகள் என அனைவரும் பரப்புரையில் ஈடுபட்டு, தமிழ்நாட்டிலுள்ள அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும்!” என்று கேட்டுக் கொண்டுள்ளார்.



‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கம் குறித்து ஆழ்வார்ப்பேட்டையில் பொதுமக்களிடம் சில கேள்விகள் அடங்கிய படிவங்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கி ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தின் முக்கியத்துவத்தை மக்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதைக் கண்கூடாகக் கண்டு மகிழ்ந்தார்.

எந்த நெருக்கடியான சூழலிலும் தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காப்பாற்றப்பட வேண்டுமென்று நினைக்கிறீர்களா? என்று பொதுமக்களிடம் முதலமைச்சர் அவர்கள் ஒரு கேள்வியை முன்வைத்தார். அப்பொழுது “தமிழ்நாடும் தமிழ் மொழியும் வளமாக இருந்தால்தானே நாம் நலமாக வாழ முடியும். எனவே, தமிழ்நாடும், மொழியும், நமது சுயமரியாதையும் காப்பாற்றப்பட வேண்டியது மிக, மிக முக்கியம் என்று அவர்கள் பதிலளித்தார்கள். அதனைக் கேட்டதும் முதலமைச்சர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு “அதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த அரசும் பாடுபடுகிறது” என்று தெரிவித்தார்கள்.

### திருப்பூர் நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்!

“ஓரணியில் தமிழ்நாடு” குறித்து முதல்வர் அவர்கள் திருப்பூர் நிர்வாகிகளுடன் கடந்த 3ஆம் தேதி அன்று கலந்துரையாடினார்.

இதுகுறித்து முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அப்போது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டதாவது:-

தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களையும் எண்ணங்களையும் ஒருங்கிணைத்திட ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் ஈடுபட்டுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்களைத் தொடர்புகொண்டு பேசினேன்.

அவினாசி ஒன்றியத்தில் மக்களுடன் இருந்த திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ந.தினேஷ்குமார், அங்கிருந்த மக்களிடம் அலைபேசியை வழங்க, “தமிழ்நாடு தொடர்ந்து தலைநிமிர்ந்து நடைபோட, திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்திட வேண்டும்” என்ற தங்களது விருப்பத்தை உற்சாகத்தோடு என்னிடம் வெளிப்படுத்தினர்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### முதல்வர் முன்னெடுக்கும் இந்த இயக்கத்திற்கு மக்கள் தரும் மாபெரும் ஆதரவு!

‘ஓரணியில் தமிழ்நாடு’ என்னும் ஒரே சிந்தனையில் நாங்கள் அனைவரும் உள்ளோம் என்று அந்தப் பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே குரலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கூறியது தமிழ்நாடு முழுவதும் இந்த இயக்கம் பெறப்போகும் வெற்றிக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்தது.

அதேபோன்று முதல்வர் அவர்கள்,

### தென்காசி மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் நேற்று கலந்துரையாடினார்!

இந்நிலையில் நேற்று (6.7.2025) தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் தெற்கு ஒன்றியம் ஆவுடையானூர் ஊராட்சி சின்னதம்பிநாடானூரில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது.

தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே. ஜெயபாலன், ஒன்றிய பொறுப்பாளர்கள் ரமேஷ், பொன்செல்வன் உள்ளிட்ட நிர்வாகிகள், வீடுவீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டனர். அப்போது அவர்களை தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின், ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை குறித்த விவரங்களை கேட்டறிந்தார். அவரது கேள்விகளுக்கு பதிலளித்த நிர்வாகிகள், மக்களிடம் நல்ல ஆதரவும், வரவேற்பும் இருப்பதாகவும், எழுச்சியுடன் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தனர்.

---

## 3.09 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்யப்படுகிறது

# கடைமடை குறுவை சாகுபடிக்கு தேவையான தண்ணீர் உள்ளது!

## விவசாயிகள் மகிழ்ச்சி!

தஞ்சாவூர், ஜூலை 7-

டெல்டா பாசனத்திற்காக ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். பின்னர், தஞ்சாவூரில் உள்ள கல்லணையையும் பாசனத்திற்காக திறந்து வைத்தார்.

இந்த நிலையில், காவிரி டெல்டா பாசனத்தில் உள்ள கடைமடை வரை தண்ணீர் செல்வதை தமிழ்நாடு அரசு உறுதி செய்யவில்லை என எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டினார். இந்த நிலையில், வேளாண் துறை வெளியிட்டுள்ள புள்ளி விவரம் வருமாறு:-

கடைமடைக்கு தண்ணீர் கிடைப்பதை திராவிட மாடல் அரசு உறுதி செய்துள்ளதும், குறுவை சாகுபடி பரப்பை 3.09 லட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது. திருவாரூர், முத்துப்பேட்டை, கோட்டூர், திருத்துறைப்பூண்டி ஒன்றியங்கள் உள்பட திருவாரூர் மாவட்டத்தில், 43 ஆயிரத்து 620 ஏக்கரில் இருந்து 86 ஆயிரத்து 92 ஏக்கராக உயர்ந்துள்ளது.

தலைஞாயிறு மற்றும் வேதாரண்யம் உள்பட நாகப்பட்டினம் மாவட்டத்தில், ஆயிரத்து 279 ஏக்கரில் இருந்து 8 ஆயிரத்து 563 ஏக்கராக பாசனப் பரப்பு அதிகரித்துள்ளது. இதேபோல், பேராவூரணி, பட்டுக்கோட்டை, மதுக்கூர் உள்ளிட்ட தஞ்சை மாவட்டத்தில் 89 ஆயிரத்து 379 ஏக்கரில் இருந்து ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 880 ஏக்கராக உயர்ந்துள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இந்த ஆண்டில் 2 ஆவது முறையாக முழுக் கொள்ளளவான 120 அடியை எட்டி உள்ளதை சுட்டிக்காட்டி உள்ள வேளாண் துறை, கடைமடை பகுதிகள் வரை தண்ணீர் செல்வதை உறுதி செய்துள்ளது.

தண்ணீர் கடைமடை பகுதி வரை வந்துள்ளதால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

---

## பிரதமரும் - நிதிஷ்குமாரும் பா.ஜ.க.வும் இணைந்து

# இந்தியாவின் குற்றத் தலைநகராக பீகாரை மாற்றிவிட்டார்கள்!

## எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் குற்றச்சாட்டு!

பாட்னா, ஜூலை 7-

முதலமைச்சர் நிதிஷ் குமாரும், பா.ஜ.கவும் இணைந்து பீகாரை இந்தியாவின் குற்றத்தின் தலைநகராக மாற்றிவிட்டதாக, எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

பீகார் மாநில பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரும், தொழிலதிபருமான கோபல் கேம்கா, தலைநகர் பாட்னாவில் உள்ள தனது வீட்டில் அருகே மர்மநபர் துப்பாக்கியால் சுட்டத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்நிலையில், இது தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி சமூக வலைதளப்பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

(அதில், பாட்னாவில் தொழிலதிபர் பொது இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், பா.ஜ.க. மற்றும்



முதலமைச்சர் நிதிஷ் குமாரும் இணைந்து பீகாரை இந்தியாவின் குற்றத்தின் தலைநகரமாக மாற்றியுள்ளனர் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளதாக விமர்சித்துள்ளார். பீகார் மாநிலம் கொள்ளை, துப்பாக்கிச்சூடு மற்றும் கொலையின் நிழலில் வாழ்வதாகவும், குற்றம் நடைபெறுவது என்பது பீகாரில் புதிய வழக்கமாகிவிட்டதாகவும்,

பீகார் அரசு முற்றிலும் தோல்வியடைந்துள்ளதையே இது எடுத்துக்காட்டுவதாகவும் ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

பீகாரின் சகோதர, சகோதரிகளே, இந்த அநீதியை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது. உங்கள் குழந்தைகளைப் பாதுகாக்க முடியாத அரசு, உங்கள் எதிர்காலத்திற்கும் பொறுப்பேற்க முடியாது என்று கூறியுள்ளார். பீகாரில் அரங்கேறும் ஒவ்வொரு கொலையும், ஒவ்வொரு கொள்ளையும் ஒவ்வொரு தோட்டாவும், மாற்றத்திற்கான குரல், இது ஒரு புதிய பீகாருக்கான நேரம் என்று குறிப்பிட்டுள்ள ராகுல்காந்தி, அந்த பீகாரில் வளர்ச்சி மட்டுமே இருக்கும், அச்சம் இருக்காது என்றும் கூறியுள்ளார்.

இந்த முறை மக்களின் வாக்கு அரசாங்கத்தை மாற்றுவதற்கு மட்டுமல்ல... பீகாரை காப்பாற்றுவதற்குமான தேர்தல் என்றும் எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

---

## மணிப்பூரில் மீண்டும் ஆட்சி அமைக்க முயற்சி

# பா.ஜ.க. முயற்சிக்கு 10 குகி பிரிவு எம்.எல்.ஏ.கள் கடும் எதிர்ப்பு !

## எதிர்ப்பு தெரிவித்து 10 எம்.எல்.ஏக்கள் தீர்மானம்!

*இம்பால், ஜூலை 7-*

*மணிப்பூரில் கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் மைதேயி மற்றும் குகி சமூகத்தினருக்கு இடையே ஏற்பட்ட மோதல் பயங்கர வன்முறையாக மாறியது. தொடர் வன்முறையில் 250க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இனக் கலவரத்தைக் கட்டுப்படுத்தத் தவறியதாக பா.ஜ.க. முதல்வர் பிரேன் சிங் கடந்த பிப்ரவரியில் ராஜிநாமா செய்தார். இதையடுத்து, மாநில சட்டப்பேரவை முடக்கி வைக்கப்பட்டு குடியரசு தலைவர் ஆட்சி நடைபெற்று வருகிறது. இதற்கிடையே, முன்னாள் முதலமைச்சர் பிரேன் சிங் தலைமையில் மீண்டும் ஆட்சி அமைக்க பாஜகவினர் ஆலோசனை நடத்தி வருகின்றனர். கடந்த ஒருமாதமாக டெல்லியில் அவர்கள் முகாமிட்டு, இதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இந்நிலையில், குக்கி பிரிவு எம்.எல்.ஏக்கள் 10 பேர், மீண்டும் பாஜக அரசு அமைய எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். குக்கி கூட்டமைப்பின் நிர்வாகிகள் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட 7 பாஜக எம்.எல்.ஏக்கள் உள்பட 10குக்கி எம்.எல்.ஏக்கள் புதிய அரசு அமைப்பதில் எந்த வகையிலும் பங்கேற்க கூடாது என தீர்மானம் நிறைவேற்றினர். மேலும், குக்கி மக்கள் தங்கள் மூதாதையர்களின் நிலம், கலாச்சாரம், அடையாளம், அரசியல், சமூக பொருளாதார உரிமைகளை ஒருபோதும் சமரசம் செய்யமாட்டார்கள் என மற்றொரு தீர்மானத்தையும் அவர்கள் நிறைவேற்றினர். மீண்டும் ஆட்சி அமைக்கும் பாஜகவின் திட்டத்துக்கு இந்த தீர்மானம் பெரும் தடையாக மாறியுள்ளது.*